# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநரின்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

ந.க..எண். 030652/சி5/இ1/2022 நாள் 02.07.2022

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி -01.01.2022 அன்றைய நிலவரப்படி அரசு/ நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி தமிழ் ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வின் மூலம் நிரப்பிட தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர்/உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர்களின் உத்தேச தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1 அரசாணை (நிலை)எண் 101, ப.க.5(1) வரவுசெலவு திட்டம்II) பள்ளிக் கல்வித் துறை நாள் 18.05.2018.
2 அரசாணை(நிலை)எண் 13, பள்ளிக் கல்வி (பக3(1))துறை நாள் 30.01.2020, அரசிதழ் எண் 36 நாள் 30.01.2020.
3 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 62448/சி2/இ1/2021, நாள் 13.04.2022
4. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

----

பள்ளிக் கல்வி ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அரசு/ நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி தமிழ் ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க முன்னுரிமை பட்டியல் தயார் செய்யும் பொருட்டு 01.01.2022 அன்றைய நிலவரப்படியான தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர்/ உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு பார்வை (2)ல் காணும் அரசாணையில் (Re-issue of Special rules) வரையறை செய்யப்பட்டுள்ள உரிய கல்வித் தகுதிகள் பெற்றுள்ளவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு பார்வை (3)ல் காணும் செயல்முறை வாயிலாக அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் கோரப்பட்டது. அவற்றிக்கு பார்வை(4)ல் கண்டவாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் 01.01.2022 அன்றைய நிலவரப்படி பட்டதாரி தமிழ் ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதி பெற்ற இடைநிலை ஆசிரியர்/உடற்கல்வி/சிறப்பாசிரியர்களின் உத்தேச தேர்ந்தோர் பட்டியல் இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலருக்கும்

அனுப்பிவைக்கப்படுகிறது. அத்துடன் முதன்மைக் கல்வி அலுவலர்களால் பரிந்துரை செய்து பெறப்பட்ட கருத்துருக்களில் பட்டதாரி தமிழ் ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதி பெறாததற்கு காரணத்தை (Remarks) குறிப்பிட்டு தனிப் படிவமாக இணைத்து அனுப்பப்படுகிறது.

இந்த உத்தேச தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலினை முதன்மைக் கல்வி அலுவலரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அனைத்து அரசு/நகராட்சி/ உயர்நிலை/மேல்நிலை ப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பி வைத்து பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்களின் பார்வைக்கு உட்படுத்தி ஒப்புதல் பெற்று அதனை தொடர்புடைய தலைமை ஆசிரியர்கள் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இந்த உத்தேச தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் முன்னுரிமை குறித்து தனியரிடமிருந்து முறையீடு ஏதும் இருப்பின் தொடர்புடைய ஆசிரியரிடமிருந்து எழுத்து பூர்வமான விண்ணப்பத்தினை உரிய ஆதாரங்களுடன் பெற்று அனுப்பிவைக்க தலைமை ஆசிரியருக்கு அறிவுறுத்த வேண்டும் எனவும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், உத்தேச தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியரின் EMIS ID NO மற்றும் SCHOOL UDISE CODE NUMBER ஆகியவற்றினை துல்லியமாக சரிபார்த்து உறுதிசெய்யவும் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்தும்படியும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உத்தேச தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் பெயர் நீக்கம் மற்றும் திருத்தங்கள் ஏதும் இருப்பின் உரிய ஆதரங்களுடன் பெற்று அனுப்பிவைக்க வேண்டும். சேர்க்கை ஏதும் இருப்பின் ஏற்கனவே சார்ந்த ஆசிரியரின் பெயர் விடுபட்டமைக்கான விளக்கத்தினை சார்ந்த ஆசிரியர் / தலைமை ஆசிரியரிடம் பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் தனது விளக்கத்துடன் கருத்துருவினை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விவரங்களை முதன்மைக் கல்வி அலுவலர் சரிபார்த்து உறுதி செய்து 05.07.2022க்குள் இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) மின்னஞ்சல் முகவரிக்கு (jdpcc2018@gmail.com) Excell format-ல் அனுப்பி விட்டு அதன் அச்சுப் பிரதியினை முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பத்துடன் அன்றே அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உத்தேச தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கை/நீக்கம்/திருத்தம் ஏதும் இல்லை எனில் உடனடியான பெயர்பட்டியலில் கண்டுள்ள ஆசிரியர்கள் சார்ந்த விவரம் சரியாக உள்ளது, தகுதி பெற்ற எவரது பெயரும் விடுபடவில்லை என்றும் சேர்க்கை/நீக்கம்/திருத்தம் ஏதும் இல்லை என்பதற்கான உறுதி மொழிச் சான்றினை முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பத்துடன்

மேற்குறிப்பிட்ட தேதிக்குள் இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) மின்னஞ்சல் முகவரிக்கு (jdpcc2018@gmail.com) அனுப்பி வைக்கும்படியும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

உத்தேச தேர்ந்தோர் பெயர் பட்டியல்

1. வரிசை எண்.1 முதல் 1890 வரை,

2. பதவி உயர்வுக்கு தகுதிபெறாதவர்கள் விவரம்.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
(மின்னஞ்சல் மூலமாக)

2.7.2022